(இ) இல்லையெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. பெ. மலைச்சாமி: இந்த நீர்த்தேக்கத்தால் எத்தனை கிராமங்களில் உள்ள எத்தனை ஏக்கர் நிலப்பரப்புகள் பயன்பெறுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்தத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

காவேரி ஆற்றின் குறுக்கே பாலம்

*65 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரி ஆற்றின் குறுக்கே குளித்தலைக்கும்—முசிறிக்கும் இடையில் பாலம் கட்டும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்; அத்தகைய செயற்குறிப்பு ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. வை. சுவாமிநாதன்: இந்தத் திட்டத்திற்கான எஸ்டிமேட் தொகை எவ்வளவு? எந்த ஆண்டில் இருந்து வேலை தொடங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதற்கு 55 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மாநில ரீதியில் இவ்வேலையை எடுத்துக் கொள்ள இயலாது. இந்த வேலையைத் தொடங்குவது இந்திய அரசிடம் இருந்து இவ் வேலைக்குக் கிடைக்கும் உதவியைப் பொறுத்திருக்கிறது.

Madras Zoo

*66 *Q.*—Thiru K. VINAYAGAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) Whether the animals in the Madras Zoo are ill-fed and ill kept;

(*b*) Whether there is rubbish all over the place in the Zoo; and

(*c*) Whether the gate collections go to the Corporation authorities or to any contractor?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) இல்லை; மிருகக் காட்சிசாலை ஊழியர்கள் அந்த இடத்தை நாள் தவறாமல் துப்புரவாக வைத்து வருகின்றனர்.

(உ) மிருகக் காட்சிசாலைப் பூங்காவைக் காண வருபவர்களிடம் நுழைவுக் கட்டணத்தையும், சைக்கிள் நிறுத்துமிடத்துக்கான கட்டணத்தையும் வசூலிக்கும் உரிமை ஆண்டுதோறும் ஒப்பந்தக் குத்தகைக்கு விடப்படுகிறது.